Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ருபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி.888)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 10 (13.05.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 221

# பிரபாவுடன் பேச்சுக்கள் நடாத்த நோர்வே அமைச்சர் வருவார்

## வியாழனன்று வன்னியில் சந்திப்பு!

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டனுக்குத் திரும்பிவிட்டபோதும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சஸன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவார் என நோர்வே தூதரகம் உறுதி செய்துள்ளது. இச்சந்திப்பிற்கென வியாழனன்று அமைச்சர் பீற்றர்ஸன் வன்னி வருகிறார்.**

கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் இந்தச் சந்திப்பு நடைபெறுமென உறுதிசெய்ததாக நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வியாழன்று வன்னி வரும் ஜான் பீற்றர்ஸன் முன்னதாக - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரைக் கொழும்பில் சந்திக்கவுள்ளதாக நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தாம் நோயுற்றிருந்து சிகிச்சைக்காக வெளிநாடு செல்லும் போதிலும், சமாதானப் பேச்சுக்களில் எவ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மினிசூறாவளி

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன்னிரவு மினி சூறாவளி ஒன்று திடீரென வீசியது.

கடும் காற்றுடன், இடி, மின்னல் மழையும் பலமாகக் காணப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளிலும் நேற்றிரவு வீசிய கடுங்காற்றினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கொழும்பில் கடும் காற்றுடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா, பதுமன் வன்னி வந்தனர்

விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்திய முக்கிய தளபதிகளான - கேணல் பதுமனும், கேணல் கருணாவும் வன்னிக்கு வந்துள்ளனர். விடுதலைப் புலிகளின் தலைமையின் அவசர அழைப்பை ஏற்று, இவர்கள் வன்னிக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பில் இருந்து கேணல் கருணாவை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட ஹெலிகொப்ரர், திருமலை சம்பூரில் தரையிறங்கி அங்கு பதுமனையும் ஏற்றிக்கொண்டு, நேற்று மதியம் வன்னிவந்து சேர்ந்ததாகத் தெரிய வருகிறது.

## ஜனாதிபதிக்கு எதிராக செயற்படின் நாடாளுமன்றம் கலைக்கப்படும்!

### எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை, ஜனாதிபதி பொறுப்பேற்றது சம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி, அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்றதற்கு, பொது ஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச் சபை ஏகமனதாக ஆதரவு தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் இது தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் எந்தவொரு தீர்மானத்திற்கும் அங்கீகாரம் வழங்குவதற்கு அந்தச் சபை தயாராகி வருகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப் பேற்பதற்கான தீர்மானம் - அரசியல் தீர்மானம் அல்ல. ஆனால், அது தேசிய முக்கியத்துவ அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும். இதனை எதிர்ப்பவர்கள், தேவையானால் நீதிமன்றத்துக்கு செல்லலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமெ. அமைச்சர் ரொக்கா பிரதமர் ரணிலுடன் சந்திப்பு



(கொழும்பு)

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா - நேற்று ஜனாதிபதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றைய தினம் - ஜனாதிபதி, பிரதம மந்திரி, ஆகியோரைச் சந்தித்து, தற்போதைய சமாதானப் பேச்சுகள் தொடர்பாக உள்ள நிலைமைகளை அவர் கேட்டறிந்தார். விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புவதாக, கிறிஸ்ரினா ரொக்கா இவர்களுடனான சந்திப்பில் கூறியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, ரொக்கா - இன்று திருகோணமலை, கண்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார். (01)

## காற்று அழுத்தத்தில் சிக்கிய சரத் பொன்சேகாவின் விமானம்

(கொழும்பு)

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் படையதிகாரிகள் வந்த விமானம் காற்றமுக்க அழுத்தத்தில் சிக்கியது.

நேற்றுமுன்தினம், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 12.15 மணிக்கு பலாலி நோக்கி வந்துகொண்டிருந்தவேளை, நீர்கொழும்புப் பகுதியில் ஏற்பட்ட காற்றமுக்க வேறுபாடு (Air Pocket) காரணமாக சிறிது நேரம் கீழ்நோக்கி திடீரென இறங்கிய விமானத்தை, விமானி சாதுரியமாகச் செலுத்தி, அதனைப் பழைய பறப்புநிலைக்கு கொண்டுவந்தார்.

### *விண்ணாணம் விநாசியர்*



பேசாமல் முழு அமைச்சரவைப் பொறுப்பையும் அவவே எடுத்துக் கொள்ளட்டும் எண்டு விட்டிடலாமே...!

## புலிகள் பேச்சுகளில் பங்கேற்பர் அமெரிக்க அமைச்சர் நம்பிக்கை

### வெளியுறவு அமைச்சரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கம், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்துகொள்ளும் என்று நம்புவதாக, அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள அவர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவை அவரது இல்லத்தில் சந்தித்தபோதே, இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ்ூம் உடனிருந்தார்.

### கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்று விடுதலைப் புலிகளின் அரசியற்பிரமுகர்களை சந்தித்துப் பேசவுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தகவற்துறை அமைச்சு ஜனாதிபதி பொறுப்பிற்கு?

மக்கள் தொடர்பாடல் அமைச்சை, ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனது பொறுப்புக்குள் கொண்டுவரவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார மறுசீரமைப்புத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அதிகாரத்தின் கீழிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை கடந்தவாரம் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி எடுத்துக் கொண்டதையடுத்து - மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை வலுவடைந்து வருவதையடுத்து, ஜனாதிபதி - தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் தொடர்பாடல் அமைச்சைத் தனது கட்டுப்பாட்டுக்குள் எந்தநேரமும் கொண்டுவரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (01)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி.913 )

# நாங்கள் அரசியல் அமைப்பாக அல்ல விடுதலை இயக்கமாகவே வந்துள்ளோம்!

## செயலக அதிகாரிகளுடனான சந்திப்பில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

தேசியத்தால் தோற்றம்பெற்று, பலம்பெற்று, பல்தேசிய நிலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் இன்று உயர்ந்துள்ளது என யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை 11 மணிக்கு அரச அதிகாரிகள், ஊழியர்களுடனான கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - நாம் இங்கு போட்டி அரசியல் அமைப்பாக வரவில்லை. விடுதலை இயக்கமாகவே வந்துள்ளோம் என்றும் கூறினார்.

இதேவேளை - நேற்று நடந்த கலந்துரையாடலில், யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கலாசார சீரழிவு, கசிப்பு உற்பத்தி, கட்டடப்பொருட்களுக்கான வளப்பற்றாக்குறையும் போன்ற விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் - யாழ். அரச அதிபர் பத்மநாதன், மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல், வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ரங்கராஜன், தமிழீழ நிர்வாக சேவையினர், அரச ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரா)

# இந்தியாவுக்குச் சென்றோர் மீளத் திரும்பி வருகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலப் போர் அனர்த்தங்கள் காரணமாக - குடாநாடு மற்றும் வன்னிப் பிரதேசத்திலிருந்து இந்தியாவிற்குச் சென்று வசித்து வந்தவர்களில் பலர், தற்போதைய சமாதான சூழ்நிலையைப் பயன்படுத்தித் தாயகம் திரும்பி வருகின்றனர்.

இவ்வாறு மீளத் திரும்பியவர்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்கள் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட நடுவப்பணியகத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (122)

# இனந்தெரியாதோரால் உளவாளி கடத்தல்!

(மன்னார்)

மன்னாரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புடைய ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதக் குழுவொன்றில் முன்னர் அங்கம் வகித்த இவர், அண்மையில் இஸ்லாம் மதத்தைத் தழுவியிருந்தார். கடல்வழியாக வந்த சிலரே இவரைக் கடத்திச் சென்றதாகவும், கடந்த சனிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்புத்துறையில் கடற்றொழிலாளர் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளன!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் கடலுக்குச் செல்லும் மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

கொழும்புத்துறையின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் கடற்தொழிலாளர்களும், தும்புத் தொழில் புரிவோரும் நீண்டதூரம் நடந்துசென்று கொழும்புத்துறை துறைமுகமூடாக- அடையாள அட்டை காட்டிய பின்னரே கடலுக்குச்செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

அததுடன், கடலிலிருந்து பிடித்து வரப்படும் மீன்கள் மற்றும் தும்புத் தொழிலுக்காக எடுத்துவரப்படும் மட்டைகள் போன்றவற்றை நிலத்திலே கொட்டி, அவையாவும் சோதனை செய்யப்பட்ட பின்னரே எடுத்துச்செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.

இதனால்- அப்பகுதியில் வசித்து வரும் கடற்தொழிலாளிகள் பெரும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர். (சு)

# சமாதான முயற்சிகளை ஜனாதிபதி குழப்பக்கூடாது

## எல்லைக் கிராமவாசிகள் ஆர்ப்பாட்டம்

ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளைக் குழப்ப முனையக் கூடாது எனக்கோரி, எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மதவாச்சியில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் - பதவியா, வெலிஓயா, கெப்பிற்றிகொலாவ, மதவாச்சி, ரம்பேவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராமவாசிகள் பங்கேற்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா - குறுகிய அரசியல் இலாபத்துக்காக அமைதி முயற்சிகளைக் குழப்பக்கூடாது என, இவர்கள் கோஷமிட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரதேச சபைத் தலைவர்களும், அமைச்சர்களும் பங்குபற்றினர்.

# பலாலி விமான நிலைய ஓடுபாதை திருத்தப்பணிக்கு இந்தியா உதவும்

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையைத் திருத்தியமைக்க இந்திய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. தற்போது படையினரின் பாவனையில் உள்ள இந்த விமான நிலையத்தை சிவில் விமானச் சேவை நிறுவனம் விரைவில் பொறுப்பேற்கலாம் எனவும், இதைத் தொடர்ந்து இத்திருத்த வேலை ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான ஓடுபாதை பழுதடைந்துள்ளதால் - இங்கு தரையிறங்கும் விமானங்களின் இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைவதாக, சிவில் விமான சேவை அமைப்புக்கள் கூறியிருந்தன. விமான ஓடுபாதை திருத்தப் பணிக்காக, விமான நிலையம் ஒரு மாத காலத்துக்கு மூடப்படலாம் எனவும் சில வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (01)

# மாதகல் கடலில் மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்!

மாதகல் கடற்பரப்பில் வைத்து மீனவர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு மாதகல் கடலில் இரண்டு மைலுக்கு அப்பால் மீன்பிடிப்பதற்காக சென்றுகொண்டிருந்த மீனவர்களை கடலில் வைத்து கடற்படையினர் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் (வயது 59), கந்தசாமி வேதாபரணம் (வயது 43) ஆகிய மீனவர்கள் காயமடைந்தனர்.

கடற்தொழிலுக்குச் சென்றுகொண்டிருந்த மீனவர் படகை வழிமறித்த கடற்படையினர் - அவர்களது படகினுள் குதித்து இருவரையும் பொல்லுகளால் தாக்கியுள்ளனர். தாம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக - யுத்த நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்திலும், மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திலும் மீனவர்கள் இருவரும் முறைப்பாடு செய்துள்ளனர்.(ரா)

# புத்தூர் கிழக்குப் பகுதியில் விவசாயக் கருத்தரங்கு

விவசாய கேந்திர நிலையத்தின், விவசாயப் போதனா ஆசிரியரால் விவசாய சம்மேளனத்தின் ஆதரவுடன் - புத்தூர் கிழக்குக் கலைவாணி சனசமூக நிலையத்தில் விவசாயக் கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் - விவசாயப் பகுதி உத்தியோகத்தர்களான பிறின்ஸ் பொன்னுத்துரை, நல்லதம்பி ஆகியோர் விவசாயம் சார்பான கருத்துக்களை வழங்கினர். வெங்காயச் செய்கையில் முகிழ் அழுகல் தாக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்தி, கூடியவிளைவைப் பெறலாம் என்பது தொடர்பாகவும், பிரமாண விகிதத்தில் எந்த வர்க்கப் பசளைகளைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இக்கருத்தரங்கில் - புத்தூர் கிழக்கு சரஸ்வதி சனசமூக நிலையம், மகாத்மாஜீ சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையங்களைச் சார்ந்த விவசாயிகள் பங்குகொண்டு பயன்பெற்றனர்.


## சிறுவிளம்பரம்

### ஒத்துமாறுதல்

திருகோணமலையில் கடமையாற்றும் அரச எழுதுநர் (மத்திய அரசு) ஒருவர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற விரும்புகிறார். அதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் எழுதுநர், திருகோணமலை அல்லது கொழும்பிற்கு ஒத்து மாறுவதற்கு விரும்பின் தொடர்பு கொள்ளவும். விஜயேஸ்வரன், தொ.பே. - 026-23077 (346)

நிறஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிம்ரன், கவுண்டமணி நடித்த

அவள் வருவாளா

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

HANNIBAL

(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.



இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின் நடித்த

புதிய கீதை

10.30, 2.30, 6.30, 9.30

(சி-883)

NORTH EAST TECHNOLOGIES (NET)



CADDY SHACK

Computers made in - expensive

After Sales Service Is Guaranteed

OPEN ON SATURDAYS & SUNDAYS 9 A.M - 4 P.M

Computers to suit Your BUDGET!

WARRANTY 6 MONTH

COMPAQ
PI - 166 Mhz / 1.2GB HDD / 32 MB RAM / 1.44 FLOPPY with 15" SVGA Colour Monitor Rs 15,900/-
COMPAQ
P1 - 200 Mhz / 2.1GB HDD/ 32 MB RAM / 1.44 FLOPPY with 15" SVGA Colour Monitor Rs 18,200/-
IBM
PIII - 450 Mhz / 4.2 GB HDD / 64 MB RAM / 1.44 FLOPPY with 15" SVGA Colour Monitor Rs 37,800/-

THE PRICE IS ALL INCLUSIVE OF BRAND NEW KEY BOARD & MOUSE, MULTIMEDIA PACKAGE OF 32 X CD-ROM, SOUND CARD & BRAND NEW SPEAKERS

Computer Accessories (Hard disk Drives) at attractive prices.

202 Havelock Road, Thimbirigasyaya, Colombo - 05.
Tel : 074 - 515151
Fax : 074 - 510834 E mail - Cadyshak@sltnet.lk
Branch : 244, High level Rd, Kirulapona Tel : 074 - 513681
Kandy : Fingertips - No 544, Peradeniya Rd, Kandy Tel : 08 - 200689
Kiribathgoda : Fingertips - No 57A, 1/1, Makola Rd, Kiribathgoda Tel : 078 - 919052
Kurunegala : Fingertips - No 27, 2nd Floor, Negambo Rd, Kurunegala Tel : 037 - 33224
Matara: Trans Technologies - No 24, Kumaratunga Mw, Matara Tel : 075 - 419970 - 1

யாழ்.கிளை :

வடகிழக்கு தொழில் நுட்பம் (NET)

34, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
TEL : 0777 - 708498 (Hotline)

விற்கப்படும் ஒவ்வொரு கணினியுடன் அதற்கான குறைந்தளவு இலவசப் பயிற்சியும் வழங்கப்படும்.

(சி-927)

# அரசின் பதில் ஆக்கபூர்வமாக இருந்தால் அமைதிக்கான நம்பிக்கை மீளக் கிடைக்கும்!

## திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திற்கு, அரசாங்கத்தின் பதில் ஆக்கபூர்வமானதாகவும், நேர்மையானதாகவும் இருப்பின்- அமைதிக்கான நம்பிக்கையை மீளப்பெற்றுக்கொள்ள முடியும் என்று, திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தெரிவித்தார்.

திருமலை - இறால்குழியில் கடந்த சனிக்கிழமை, அதிகாரிகள் பயிற்சியை நிறைவுசெய்த போராளிகள் வெளியேறும் வைபவத்தில் உரையாற்றியபோதே, கேணல் பதுமன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு பேசும்போது மேலும் தெரிவித்ததாவது,

கடந்த நான்கு மாதங்களாகச் சமாதானப் பேச்சுக்கள் செல்லும் பாதையையொட்டி நாம் அதிருப்தி கொண்டுள்ளோம். இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுக்காக அரசாங்கத்தினால் ஒரு ரூபாகூட வழங்கப்படவில்லை.

புலிகள் மீளவும் சண்டையை விரைவில் தொடங்கவுள்ளனர் என்று சில விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

ஆனால் - யுத்தம் செய்வதோ, சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதோ அனைத்துமே, அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறதே தவிர, எம்மிடம் இல்லை.

எமது மக்களைப் பாதுகாக்கும் உரிமையை எவரும் தடுத்துவிட முடியாது. நாம் போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சிகளை வழங்குவதன் மூலம்- மக்களுக்கான பாதுகாப்பையும், இராணுவக்கட்டமைப்பையும் வலுப்படுத்துகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் -

நாம் எமது இராணுவபலத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதன்மூலம் மட்டுமே தற்போதைய சமாதான முயற்சிகளின் ஊடாக எமது மக்களின் அபிலாசைகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ய முடியும்.

ஆட்சிக்குவரும் ஒவ்வொரு அரசாங்கங்களும் அமைதித்தீர்வு பற்றியே பேசுகின்றன. ஆனால், தமது இராணுவப்பலத்தை மேம்படுத்திக் கொள்கின்றன. இவர்களின் முழு நோக்கமும்- தமிழரை விரட்டியடித்து, எமது நிலத்தை அபகரிப்பதேயாகும்.

சமாதானப் பேச்சுக்கள் நடந்துகொண்டிருக்கின்றபோது, இராணுவப் பயிற்சிகளைப் புலிகள் ஏன் மேற்கொள்கின்றார்கள் என்று மக்கள் கேட்கின்றார்கள்.



எம்மிடமுள்ள இராணுவ பலத்தினால்தான் இன்றைய அமைதிச் சூழல் ஏற்பட்டது. எப்போது நாம் இராணுவபலத்தை இழக்கின்றோமோ, அப்போது இந்த அமைதி முயற்சிகள் முடிவுக்கு வந்துவிடும்.

நாம் எமது பலத்தினை வெளிப்படுத்துவதற்குக் காரணம் , அமைதி முயற்சிகள் தக்கவைக்கப்படுவதற்கேயாகும். நாம் அமைதியில் பூரணமான நம்பிக்கை வைத்திருக்கின்றோம்.

இழந்த எமது உரிமைகள் - அமைதி முயற்சிகள் மூலம் மீண்டும் கிடைத்தால் நாம் மகிழ்ச்சியடைவோம். அமைதியையோ, யுத்தத்தையோ படைபலம் மூலமே வெல்ல முடியும் எனத் திலக் மேலும் தெரிவித்தார்.






யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் - சர்வதேசப் பிரிவு நேற்றைய தினம் ஆரம்பித்துவைக்கப்பட்டபோது, அக்கிளை முகாமையாளர் து.ரகு உரையாற்றுவதையும், மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் மு.க.சிவபாதவிருதையர், உதவிப் பிரதேச முகாமையாளர் க.ஆனந்தராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதை மேலுள்ள படத்திலும், சர்வதேசப்பிரிவின் செயற்பாடு வைபரீதியாக ஆரம்பித்துவைக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: எவ்.எக்ஸ்.சுதர்சன்)

# இன்ரநெற் மூலமாக பொலிஸூக்குப் புகார்!

## புதிய திட்டம் அறிமுகமாகிறது

'ஈ - பொலிஸ் மாஸ்ரர் பிளான்' என்ற திட்டத்தின் மூலம் பொலிஸாரிடம் இன்ரநெற் மூலம் புகார்களைத் தெரிவிக்க முடியுமென்று, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸாருக்குத் தெரிவிக்கப்படும் புகார்களை இந்தத் திட்டத்தின் மூலம், பொதுமக்கள்- வீடுகளிலிருந்தே தெரிவிக்கமுடியும். இது தொடர்பாகப் பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ.ஆனந்தராஜா தெரிவிக்கையில-

இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம், பொலிஸாருடன் பொதுமக்கள் நெருங்கிப் பணியாற்றமுடியும். புகார்களை மட்டுமன்றி, பொதுமக்களின் செயற்பாடுகள், கருத்துக்களையும் பொலிஸ் நிலையங்களுக்குத் தெரியப்படுத்த இது வாய்ப்பாக அமையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மண்டைதீவுக்குச் செல்வதற்கு சிவாஜிலிங்கத்துக்கு கட்டுப்பாடு!

மண்டைதீவுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை, கடற்படையினர், தடுத்து நிறுத்தி நீண்ட நேரத்தின் பின்னரே செல்ல அனுமதியளித்தனர்.

பொதுமக்களைச் சந்திப்பதற்காகச் சென்றபோதே, மண்டைதீவுச் சந்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

நீண்டநேரம் கடற்படையினருடன் இடம்பெற்ற வாக்குவாதத்தைத் தொடர்ந்து - மூன்று மணித்தியாலத்துக்குள் திரும்பவேண்டும் என்ற உத்தரவாதத்துடன் மண்டைதீவுக்குச் செல்ல அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து, மண்டைதீவுக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார். இதன்போது அங்குள்ள மக்கள் -

தமது உறவினர்கள் வீட்டுக்கு வந்தால் இரவில் தங்குவதற்குக் கடற்படையின் அனுமதி பெறவேண்டியிருப்பதாகவும், மீன்பிடிக் கெடுபிடிகள் தொடர்வதாகவும் தெரிவித்தனர்.

மேலும், மண்டைதீவு மக்களுக்கான குடிநீர் வசதிகள், போக்குவரத்து வசதிகள் குறித்தும் பொது மக்களுடன் அவர் கலந்துரையாடினார்.

மண்டைதீவு சென்.பற்றிக்ஸ் மற்றும் மதிஒளி சிறுவர் பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தலா 50 ஆயிரம் ரூபாவை, பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்குவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உறுதியளித்தார்.

# தேசிய லொத்தர் சபை பிரச்சினை; முஸ்லிம் காங்கிரஸ் மௌனம்!

## கருத்து வெளியிடுவதைத் தவிர்க்க முடிவு

(கல்முனை)

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி தன்னிச்சையாகப் பொறுப்பேற்றமை தொடர்பாக, முஸ்லிம் காங்கிரஸ் எந்தவித கருத்துக்களையும் வெளியிடுவதில்லை என்று அந்தக் கட்சி முடிவுசெய்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக்குழுக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதையடுத்து அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் இந்த விவகாரம் தொடர்பாக எந்தக் கருத்துக்களையும் கூறுவதில்லை என்றும், நாளை புதன்கிழமை பிரதமரைச் சந்தித்துப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதென்றும் முடிவு செய்யப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார். (07)

## ஆசிரிய நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக், கல்வி வலயத்திற்குரிய ஆசிரிய நிலையத் திறப்புவிழா, யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நாளை புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் -

பிரதம விருந்தினராக மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கமும், சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கை -அமெரிக்கா இணையும்!

## அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அறிவிப்பு

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கையையும் இணைத்துக்கொள்ள அமெரிக்கா தயாராக விருப்பதாக அந்நாட்டு வர்த்தக அமைச்சின் பிரதிநிதி றொபேட் சொய்லிக் தெரிவித்தார்.

இது தொடர்பாக, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி -

சர்வதேச பொருளாதார நிறுவனத்தில் இடம்பெற்ற முக்கிய மாநாட்டில் 'சுதந்திர வர்த்தக ஒப்பந்தமும் அமெரிக்காவும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையிலேயே றொபேட் சொய்லிக் இவ்வாறு குறிப்பிட்டார்.

தெற்காசியாவில் உள்ள நாடுகளில், அமெரிக்காவின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இணைந்துகொள்ளும் முதலாவது நாடாக இலங்கை விளங்குவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்க தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டால், இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களில் 41 சதவீதமான அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலம், இலங்கையில் இருந்து வருடாந்தம் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும்.

கடந்த வருடம் ஜூலை மாதம் அமெரிக்காவுக்கு விஜயம்செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கூட்டிணைவு ஒப்பந்தங்கள் பற்றிக் கலந்துரையாடியிருந்தார். இதற்கமையவே இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இரண்டு நாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் இது தொடர்பாகக் கொழும்பிலும் வொஷிங்ரனிலும் ஆராய்ந்திருந்தனர்.

அமெரிக்காவின் சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் - இலங்கை இணைந்துகொள்வது இரு நாடுகளினதும் பொருளாதார உறவுகள் முக்கிய கட்டத்திற்குச் செல்வது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றும் இலங்கையர்

## விமானியாக பக்தாத்தில் இருக்கிறார்

(கொழும்பு)

அமெரிக்க இராணுவத்தில் இணைந்து கொண்ட இலங்கையர் ஒருவர், அமெரிக்காவில் முக்கிய தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குபற்றி வருவதாகத் தெரியவருகின்றது.

சாம் திலகரட்ண என்ற இலங்கையர், தனது 21 ஆவது வயதில் - 2000 ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் இணைந்து கொண்டார்.

உலங்கு வானூர்தி விமானியான இவர், அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான 'சனூக்' ரக ஹெலிகளை ஓட்டி வருகின்றார்.

கலிபோர்னியாவிலுள்ள 101 ஆவது விமான மூலம் தரையிறங்கும் றெஜிமென்டில் இணைந்து கொண்ட இவர், கடந்த மே மாதத்துக்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் பணியாற்றினார்.

பின்னர் குவைத்தில் பணியாற்றிய இவர், தற்போது பாக்தாத்திலுள்ள அமெரிக்கத் தளம் ஒன்றில் பணிபுரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரியாலை சிறுவர் பூங்காவில் இராணுவத்தின் காவலரணங்கள்!

## தடுக்குமாறு கண்காணிப்புக் குழுவிடம் மக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின் சிறுவர் பூங்கா அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினர் புதிதாக அரண்களை அமைத்து வருவதைத் தடுத்து நிறுத்துமாறுகோரி- அரியாலை சென். மேரிஸ் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

எமது சனசமூக நிலைய வளாகத்தில் சிறுவர் பூங்காவும், தொழிலாளர் ஓய்வெடுக்கும் கட்டடமும் அமைந்துள்ளன. மீளக்குடியமர முடியாத குடும்பங்கள் எமது சனசமூக நிலையத்தில் ஆறுமாத காலமாக வசித்து வருகின்றன.

இந்த நிலையில் இராணுவத்தினர் புதிதாக அரண்களை அமைப்பதுடன் சனசமூக நிலையத்திலுள்ள மக்களையும் வெளியேறுமாறும் பணிததுள்ளார்கள்.

படையினரின் காவலரண்களை அமைக்கும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதுடன், இப்பகுதிக் கரையோரத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவக் காவலரண்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## நாடும் நடப்பும்

ஒட்டுவமோ? வெட்டுவமோ?



# தேசிய லொத்தர்சபை ஜனாதிபதி நிதியத்திற்கு நிதி செலுத்தவில்லை என்பது முழுப்பொய்!

## சபையின் தலைவர் அறிவிப்பு

ஜனாதிபதி நிதியத்துக்குத் தேசிய லொத்தர்சபை நிதி செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை, அபிவிருத்தி லொத்தர் சபை முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பாகத் தேசிய லொத்தர் சபையின் தலைவர் கருத்து வெளியிடுகையில்,

1998 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுவரை 1600 கோடி ரூபாவை அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதி நிதியத்துக்குச் செலுத்தியுள்ளது. சென்ற வருடம் 46 கோடி ரூபா செலுத்தப்பட்டது. தற்சமயம் 48 கோடி 40 இலட்சம் ரூபா செலுத்தப்பட இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 4 கோடி ரூபா செலுத்தப்பட்டது. இன்னும் ஒரு வார காலத்தில் 4 கோடி ரூபா வழங்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்து, ஜனாதிபதி நிதியத்துக்கு நிதி படிப்படியாக அதிகரித்துள்ளது என்றும் சபையின் தலைவர் தெரிவித்தார்.

அரசு, தேசிய லொத்தர் சபையை நோர்வே அரசாங்கத்துக்குக் கையளிக்க உள்ளது, என்ற குற்றச்சாட்டையும் அவர் முற்றாக நிராகரித்தார்.

# பெரும் கசிப்பு உற்பத்தி நிலையம் ஆனைக்கோட்டையில் சிக்கியது!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டைச் சந்தியடியில் அமைந்திருந்த பாரிய கசிப்பு உற்பத்தி நிலையத்தை மானிப்பாய் பொலிஸார் முற்றுகையிட்டு கசிப்பு உற்பத்திப் பொருட்களைக் கைப்பற்றினர். உற்பத்திநிலைய உரிமையாளரான பெண்ணைக் கைதுசெய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

நீதிவான் சரோஜினி இளங்கோவன் இவருக்கு அபராதம் விதித்ததுடன், கடுமையாக எச்சரிக்கை செய்தார். அத்துடன், 5000 ரூபா தெல்லிப்பளை உளநல சங்கத்திற்கு வழங்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## பல்கலையில் நூல் அறிமுகம்!

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் முனைவர் கு.அரசேந்திரன் எழுதிய, 'உலகம் பரவிய தமிழின் வேர் - கல்' அறிமுகவிழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

## மிலேனியம் சிற்றியில்

# மீட்கப்பட்ட ஆயுதங்கள் மீண்டும் இராணுவத்திடம்!

## ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு

அத்துருகிரிய - மிலேனியம் சிற்றியில், இராணுவப் புலனாய்வுத் துறையால் மறைத்து வைக்கப்பட்டிருந்தபோது மீட்கப்பட்ட ஆயுதங்கள், மீண்டும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்த ஆயுதங்களை நீதிமன்றம் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பில் வைக்க உத்தரவிட்டிருந்தது. இந்த ஆயுதங்களை மீளவும் இராணுவத்திடமே ஒப்படைக்குமாறு கடந்த புதன்கிழமை கண்டி நீதிமன்றம் விசேட அதிரடிப்படைக்குப் பணித்தது.

இதையடுத்தே ஆயுதங்களை இராணுவத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆர்.பி.ஜிகள், ஆறு கிளைமோர்கள், 10 அமுக்க வெடிகள், மூன்று T56 ரகத் துப்பாக்கிகள், 66 இராணுவச் சீருடைகள் என்பனவே மீளவும் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்த வழக்கில் ஆறு படையினர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## மதுபானசாலைகளை நாளைமுதல் மூட சுற்றுநிருப அறிவிப்பு!

(கொழும்பு)

'வெசாக்' பண்டிகையை முன்னிட்டு நாட்டிலுள்ள சகல உத்தரவு பெற்ற மதுபானசாலைகளையும், நாளை புதன்கிழமை தொடக்கம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஐந்து நாட்களுக்கு மூடிவிடுமாறு, மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

# ஏழு ஆண்டுகள் போரில் 1154 பொலிஸார் பலி!

## உள்துறை அமைச்சர் அறிவிப்பு

1995 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வடக்கு - கிழக்கு யுத்தத்தில் 1154 பொலிஸார் இறந்துள்ளனர் என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தக் காலத்தில் 110 பொலிஸார் யுத்தத்தில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். இறந்த, காணாமற்போன பொலிஸாருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கண்டெடுத்த அடையாள அட்டைகள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில்!

பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களின் போது தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு - கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, கொடிகாமம் பொலிஸ் நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

வேலுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை (இயற்றாலை), இராமநாதன் சிதம்பரநாதன் (மிருசுவில்), முத்தையா நடராசா (மீசாலை), நாகலிங்கம் நாகராசா (நாகர் கோயில் தெற்கு), தம்பிப்பிள்ளை தர்மலிங்கம் (மீசாலை வடக்கு), மகாதேவா விஜயமோகன் (மந்துவில் மேற்கு), கனகரத்தினம் செல்வதீபன் (பலாலி கிழக்கு), வீரன் கந்தையா (மீசாலை வடக்கு), சுப்பிரமணியம் சின்னத்தம்பி (திருவையாறு கிளிநொச்சி)

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள், கொடிகாமம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டு, அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (36)

# பாதுகாப்பு வலயத்தை விலக்காதீர்கள்; கடற்புலிகளுக்கு அங்கீகாரம் வேண்டாம்!

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்புகும், இங்கு வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களினதும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயத்தை விலக்கிக்கொள்ளல், புலிகளுக்குக் கடற்பிராந்தியத்தை ஒப்புக்கொடுத்தல் போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதனால், இந்து சமுத்திரத்தில் இருக்கும் இந்தியா உட்படப் பல நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அவரது கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி, நுணாவில் வீதியைத் திருத்த ஏற்பாடு

(தென்மராட்சி)

சாவகச்சேரி, நுணாவில் பகுதிகளில் உள்ள, கண்டிவீதி விரைவில் திருத்தப்படவிருக்கிறது. இந்தப் பகுதியிலுள்ள வீதி மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளது.

வீதியைத் திருத்துவதற்காகக் கறகள் அப்பகுதியல் பறிக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்யும் மக்கள் பல்வேறு கஷ்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

# அல்வாய் மனோகரா அணி வெற்றியைப் பெற்றது!

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் வதிரி பொம்பர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடந்த இறுதியாட்டத்தில் இரண்டு அணியினரும் சளைக்காது விளையாடி, தலா 2 - 2 கோல்களை பெற்றுக்கொண்டனர்.

மேலதிக நேரம் கொடுக்கப்பட்டும், கோல் கணக்கில் மாற்றமேற்படாததால், பெனால்ட்டி மூலம் முடிவுக்கு விடப்பட்டது. பெனால்ட்டி உதை மூலம், மனோகரா விளையாட்டுக் கழகம் 3 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

தொடர்ந்து இடம்பெற்ற காட்சிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை அணி - பொம்மர்ஸ் அணியியை 2 - 0 என்ற கோல்கணக்கில் வென்றது.

பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் மகிழ்ராஜ் தலைமையில் நடந்த இந்த இறுதிப் போட்டியில், சிறப்பு விருந்தினராக வடமராட்சிக் கோட்ட அரசியற்றுறைப் பொறுபபாளர் தயா கலந்துகொண்டார்.

# யாழ். நகரில் திருட்டுகள் அதிகரிப்பு; விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் அண்மைக்காலமாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு, யாழ்.நகர குற்றத்தடுப்புப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

பெருமளவு பொதுமக்கள் பொருட்களை களவு கொடுத்ததாக, யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்து வருகின்றனர். இத்தகைய திருட்டுக்களைத் தடுப்பதற்காக வீடுகளைவிட்டு வெளியே செல்லும்போது பாதுகாப்பாக வீட்டைப் பூட்டிவிட்டுச் செல்லுமாறும், விலாசம் விசாரிக்க, பிச்சை எடுக்க வருபவர்கள் மீது எச்சரிக்கையாக இருக்குமாறும் பொலஸார் கேட்டுள்ளனர்.

வீதிகளில் விடப்படும் துவிச்சக்கரவண்டிகளைப் பூட்டிவிட்டுச் செல்லுமாறும் அல்லது அவற்றை உரிய பாதுகாப்பு நிலையங்களில் விடுமாறும், வீடுகளில் பணம், நகை ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸார் கேட்டுள்ளனர். (க)




# இதய மாற்றுச் சிகிச்சைக்கு பின்னணியில்

**1967** இல் தென்னாபிரிக்காவில் உலகின் முதலாவது இதய மாற்று அறுவைச் சிகிச்சையை செய்தவர் வெள்ளையரான கிரிஸ்ரியன் பெர்னாட் என்பது அனைவரும் அறிந்தது. ஆனால், அவரின் இந்த சாதனைக்குப் பின்னின்றவர் கறுப்பினத்தவரான ஹமில்டன் நாகி. விவசாயியான இவர் தனது பண்ணையில் இருந்த


ஹமில்டன் நாகி


கிரிஸ்ரியன் பெர்னாட்

விலங்குகளைக் கிரிஸ்ரியன் பெர்னாட்டின் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தக் கொடுத்து உதவினார்.

கறுப்பினத்தவரான இவரின் தகவல்கள் மறைக்கப்பட்டிருந்தபோதிலும், தற்போது படத்தயாரிப்பாளர் ஒருவரினால் இவரது உதவிகள் பற்றிய தகவல்கள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது இவர் தனது 78 ஆவது வயதில் ஓய்வு பெற்ற விவசாயியாக உள்ளார்.

# சார்ஸ் தொடர்பான மூலத்தகவல்கள் சீனாவிடம் இல்லை

சார்ஸ் நோய் தொடர்பான முக்கிய ஆவணங்களைச் சேகரிக்கச் சீனா தவறிவிட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.



தலைநகர் பீஜிங்கில் எப்போது, எங்கே சார்ஸ் நோய் தொற்று ஏற்பட்டது என்பதான தகவல் எதையும் அதிகாரிகள் கொண்டிருக்கவில்லை.

இதனால், நோய் எவ்வாறு பரவியது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமலுள்ளதாக உலக சுகாதார ஸ்தபானம் கூறுகிறது.

# போர் எறும்பினங்கள் ஒரே மூதாதையைக் கொண்டவை

எறும்பினங்களில் போர் வீரர்களாகச் சில எறும்புகள் பணிபுரிகின்றன. இந்தப் போர்வீரர் எறும்பினங்கள், 100 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கொண்ட்வானா என்ற புராதன கண்டநிலத்திலிருந்து தோன்றியவை எனக் கூறப்படுகின்றது.



உலகெங்கிலுமுள்ள இந்தப் போர்வீரர் எறும்பினங்களுக்கு மூதாதையர் ஒருவரே என்பது தான் சுவாரசியமான விடயம்.

ஒரே மூதாதையிலிருந்து இவை தோன்றினாலும், அவை வாழும் பிரதேசங்களுக்கு ஏற்பத் தம்மை இவை இயல்பாக்கம் செய்துள்ளனவாம். இவற்றைப்போன்றே சுறாக்கள், முதலைகள் என்பனவும் 10 மில்லியன் ஆண்டுகளாக எந்த மாற்றமுமின்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விலங்குகளின் ஞாபகசக்தி



விலங்குகள் சிலவும் மனிதர்களைப்போன்றே தமது நடத்தைகளையும் காட்டுவதாகக் கூறப்படுகிறது. மனிதனுடன் சேர்ந்து வாழும் சில விலங்கினங்கள் - மனித நண்டத்தைகளை அவர்களைப் போன்றே பின்பற்றுகின்றனவாம்.



மனிதர்களின் அங்கீகாரத்தைப் பெற அவ்வாறு அவை செயற்படலாம் என விலங்கியலாளர்கள் கூறுகின்றனர். சில விலங்கினங்கள் நல்ல ஞாபகசக்தியையும் கொண்டிருக்கின்றனவாம்.

இந்த ஞாபகசக்தியின் துணைகொண்டு செம்மறியாடுகள்கூடத் தமக்குப் பரிச்சயமான



50 இற்கும் மேற்பட்ட செம்மறி ஆடுகளின் முகங்களைப் பல வருடங்களுக்கு ஞாபகத்தில் வைத்திருக்குமாம்.

குறிப்பாகப் பண்ணை விலங்குகளில் செய்யப்பட்ட ஆய்வுகளில் மனிதனின் நடத்தைக் கோலங்கள் அவற்றுக்குமிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

# சூழல் மாசடைதலால் விண்காட்சியும் பாதிப்பு



சூழல் மாசடைந்து வருவதால், இரவில் விண்வெளியை அவதானிப்பதிலும் தடங்கல்கள் ஏற்படுவதாக பிரிட்டனில் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இரவில் வானிலிருந்து கிளம்பும் ஒளியைவைத்தே வெளியில் உலாவச் செல்பவர்கள் தமது வழியைக் கண்டுபிடிப்பது வழக்கம்.

சூழல் மாசடைந்து வானம் இருளடைவதால், இவ்வாறு இரவில் உலாவுபவர்கள் பெரும்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இங்கிலாந்தின் பல பகுதிகளில் இரவில் இயற்கைக் காட்சிகளை ரசிப்பதோ, விண்வெளியை அவதானிப்பதோ மிகவும் கடிணமானதாகிவிட்டதாக அங்குள்ள பழமைபேண் அமைப்பின் தலைவர் சேர். மக்ஸ் காஸ்ரிஸ் கூறுகின்றார்.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இப்படித்தான் 1926 இல் மோனோ **(MONO)** படம் வெளியானது. இந்தப் படம் 'நானூக் ஒவ் த நோர்த்' மாதிரி வெற்றிப்படமாக தான படம் என்று கருதப்படுகிற மான் ஒவ் த ஆரன் **(MAN OF THE AREN)** படம் வெளியானது. இந்தப் படம் கலைத்தன்மையில் சிறந்து விளங்குவதுபோலவே, வியாபார ரீதியாகவும் மகத்தான வரவேற்புப் பெற்றது. கடலுடன் போராடும் மனிதனது நிரந்தரமான போராட்டங்களை விளக்குவது தான் 'மான் ஒவ் த ஆரன்' படத்தின் உள்ளடக்கம். ஆரன் தீவில் வசிக்கும் மீனவர்களின் சுறாமீன் வேட்டையே படத்தின் பிரதான அம்சமாக இருந்தது. உண்மையாகக் கூறுவதானால் - இதையொரு விவரணப் படம் என்று


'லான்ட்' படத்தில் ஒரு காட்சி

கூறமுடியாது. வாழ்க்கையின் யதார்த்த நிகழ்ச்சிகளை ஃபிளாஹர்ட்டி கலைமெருகுடன் படைத்திருந்தார் எனலாம்.

அவரது எல்லாப் படங்களிலும் பொதுவான இந்த அம்சத்தை நாம் உணரலாம். இதனாலேயே யதார்த்தப் பாணிப்படங்களின் ஆரம்ப காலப் படைப்பாளராக ஃபிளாஹர்ட்டியும், அதை வளர்த்தவர்


லான்ட் படத்திலிருந்து...

என்கிற பெருமை டைரக்டர் ஜான் கிரியேர்ஸ் என்பவரையும் சேருகிறது.

## ரொபேட் ஃபிளாஹர்ட்டி

அமையவில்லை. இந்தப் பட வெளியீட்டுக்குப் பிறகு ஃபிளாஹர்ட்டி சில நாட்கள் வேலையற்று இருந்தார். பிறகு இரண்டு சிறியபடங்களை எடுத்தார். அதன்பின் ஜேர்மனிய இயக்குநர் முர்னுவுடன் **(MURNAU)**, ரப் **(TAB)** படத் தயாரிப்பில் உதவிபுரிந்தார்.

1932 இல் லண்டன் சென்ற ஃபிளாஹர்ட்டி இண்டஸ்டரியல் பிரிட்டன் **(INDUSTRIAL BRITON)** படத்தை இயக்கி வெளியிட்டார். 1934 இல் ஃபிளாஹர்ட்டியின் மகத்

1935 ஆம் வருடம் இந்தியப் பின்னணியில் ஒரு படம் தயாரிப்பதற்காக ஃபிளாஹர்ட்டி இந்தியாவுக்கு வந்தார். ஆனால், அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. வெகுநாட்கள் இடைவெளிக்குப் பிறகு - லான்ட் **(LAND)** படமும் அதற்கடுத்து லூஸியானோ ஸ்ரோரி **(LUCIYANO STORY)** படமும் வெளியானது. இதுவே இவரது கடைசிப் படம் என்று கருதப்படுகிறது.

(முற்றும்)

# விண்கற்களின் மாதிரியுடன் ஜப்பானிய விண்கலம்



விண்கற்களின் மாதிரிகளைச் சேகரிப்பதற்காக ஜப்பான் நாலரை வருட காலத்திற்குப் பயணிக்கக்கூடிய விண்கலம் ஒன்றை 1998 இல் அனுப்பியிருந்தது. அது, தற்போது விண்கற்களின் மாதிரிகளைச் சேகரித்துக் கொண்டு திரும்புகிறது. இவற்றை ஆய்வுசெய்வதன் மூலம் சூரிய குடும்பத்தின் தோற்றம்பற்றி அறியமுடியும் என ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சூரிய குடும்பத்தின் புதைபடிவங்களாகவே விண்கற்கள் விளங்குகின்றன என ஜப்பானிய விண்ணியல் விஞ்ஞான ஆய்வுத் தலைவர் யுனிஷிரோ கவாகுச்சி கூறுகின்றார்.

பூமியிலிருந்து 300 மில்லியன் கிலோமீற்றர்களுக்கு அப்பால் சென்றிருந்த இந்த விண்கலம், தற்போதே புவிக்குத் திரும்புவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வின் மூலம் பல அளவுகளிலும், பல நிலைகளிலும் விண்கற்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

# திஹார் சிறையில் கணினிப் பயிற்சி



ஆசியாவின் மிகப்பெரிய சிறைச்சாலையான திஹார் சிறையிலுள்ள கைதிகளுக்குக் கணினிப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இதற்கெனக் கணினிக்கல்வி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.



சிறையிலிருந்து தண்டனை முடிந்து வெளியேறும் கைதிகள் - சமூகத்தில் நிலையூன்ற இந்தப் பயிற்சி கைகொடுக்கும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை திஹார் சிறைச்சாலையில் குளிர்பானசாலை, உடற்பயிற்சிச்சாலை, அழகுபடுத்தும் நிலையம் என்பனவும் கைதிகளுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

கைதிகளுக்குச் சிறையில் பணத்தை வைத்திருக்கத் தடைவிதிக்கப்பட்டிருப்பதால், பணத்திற்குப் பதிலாகக் கூப்பன்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு கைதிகள் பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும்.

# இப்படியும் மருத்துவமனைக் கட்டில்

எதிர்காலத்தில் வைத்தியசாலைகளில் உள்ள கட்டில்கள் நோயாளிகளைத் தாங்குவது மட்டுமல்ல, நோயாளியின் மருந்து உட்கொள்ளலையும் கணினிகள் மூலம் கண்காணிக்கும். அதிகளவில் மருந்து உள்ளெடுக்கப்பட்டால், தவறான மருந்து உட்கொள்ளப்பட்டால் கட்டிலிலுள்ள எச்சரிக்கை ஒலி அபாயத்தை அறிவிக்கும்.

இந்த வகைக் கட்டில்களை உருவாக்குதில் டென்மார்க் பல்கலைகழக ஆய்வாளர்கள் ஈடு பட்டுள்ளனர்.





டென்மார்க்கிலுள்ள ஆர்க்கஸ் பல்கலைக் கழகத்தில் இந்தப் புதிய கட்டிலை உருவாக்கு வதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# வாரம் ஒரு யோகாசனம்

## பாத ஹஸ்தாசனம்



நேராக நிற்கவும். இரண்டு பெருவிரல்களும் ஒன்றை ஒன்று தொட்டிருக்க வேண்டும். இரண்டு கைகளையும் மேல்நோக்கித் தலைமேல் உயர்த்த வேண்டும். மெல்ல முன்னால் வளையவேண்டும். கால்முட்டி, வளையக் கூடாது. இரண்டு உள்ளங்கைகளையும் காலுக்கு அருகில் தரையைத் தொடவேண்டும். தலையை வளைத்து கால்முட்டியில் தொட வேண்டும். பின்பு பழைய நிலைக்குத் திரும்பவும். 5-10 தடவைகள் செய்தால்போதும்.

## பாத ஹஸ்தாசனத்தின் நன்மைகள்

தலை கீழ் குனிவதனால் தலைக்கு இரத்தம் பாயும். 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் இந்த ஆசனம் செய்வதனால் சிரசானத்தின் பலன் கிட்டும். கால்கள் பலன் பெறும். முகம் அழகடையும். இரைப்பைக் குடலுக்குப் பயிற்சி ஏற்படும். கல்லீரல், மண்ணீரலுக்குப் பயிற்சி உண்டாகின்றது. முதுகெலும்பு வளைவதால் நரம்புக் கூட்டங்கள் பலம்பெறும். வயிற்றில் கொழுப்புச் சேராது. நோயே வராது.

கற்றுத்தருபவர் - மா.மகாநேசன் (கரவெட்டி)

# உள்ளத்தின் அன்பு வெளிப்பாடே

# ஆண் - பெண் அந்தரங்க உறவு

இன்று உடலுறவு என்று சொல்லைப் பாவிக்கும்போது - சமுதாயத்தில் மிகவும் கேவலமான ஒன்றாகவே எண்ணுகிறோம். பலர் அதைப்பற்றிக் கதைப்பதற்கும், எழுதுவதற்கும் வெட்கப்படுவர். இது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும்.

உடலுறவு, இயற்கையின் சனப்பெருக்கத் தேவையைப் பூர்த்தி செய்கிறது. அடுத்தது கணவன், மனைவி தமது அன்பைச் சரீரம், மனத்தின் மூலம் வெளிப்படுத்தும் வழியாகும். இந்த இரண்டு குறிக்கோளும் உடலுறவில் நிறைவேறுகிறது எனலாம்.

சிலர் இவ்விரு குறிக்கோளில் ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்றதைக் குறைவாக நினைப்பர். பிள்ளை என்பது இருவரது அன்பின் வெளிப்பாடே. திருமணத்திற்கு முன்னிருந்த உறவைவிட, இன்று உறவை வளர்க்கச் சரீரத்தைப் பயன்படுத்துகின்றனர்.

வார்த்தை இல்லாது ஸ்பரிசத்தின் மூலம் அன்பை வெளிப்படுத்தமுடியும். இருவரது தொடர்பையும் வளர்க்க உடலுறவு பயன்படுகிறது. உடலுறவில் ஒரு சரீரம் மட்டுமல்ல, இரு சரீரங்களும் அன்பைப் பரிமாறுகின்றன. இல்லையேல் சடலத்துடன் உறவுகொள்ளலாமே. அது நடப்பதில்லை. ஏன்? ஒருவர் மற்றவருக்கு மனதால், ஸ்பரிசத்தால் அன்பை வெளிப்படுத்துகின்றார்.



உடலுறவு என்பது, தனது சாரீரத்துக்கு அப்பால் சென்று - மற்றவரது வாழ்வில் உள்ளாதல் ஆகும். மற்றவருடன் வாழ்வைப் பகிர ஆயத்தப்படுத்துவதாகும்.

உடலுறவில் இரு பக்கங்களுண்டு. எல்லா அழகிலும், வல்லமையிலும் இருபக்கம் உண்டல்லவா? உடலுறவின் மூலம் உயர்வு, விடுதலை ஏற்படுகிறது. உயர்ந்த அன்பை, வல்லமையைப் பெறுவதற்கு மாறாக மறுபக்கத்தில் தனது சுயதிருப்தியை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கணவன், மனைவியை ஒரு பொருளாகப் பாவிக்கிறான். ஆகவே உடலுறவு சுயநலத்துடன் செய்யப்படுவதா? அல்லது என்னையும், மற்றவரையும் விடுதலை யாக்கப் பயன்படுவதா? என்பது முக்கிய மானது.

அன்பு இருவருக்கிடையிலும் இருந்தாலே உடலுறவின் மூலம் அன்பு செய்பவர் தன்னைக் கொடுப்பதாக மாறும். மற்றவர் பொருளாக அல்லாது அன்பை வெளிப்படுத்தும் ஊடகமாக ஒரேதிருப்தியை அனுபவிக்க வேண்டும். பொருளாகப் பாவிக்காதிருந்தால் மற்றவரது விருப்பு, வெறுப்பு, சுதந்திரம், சௌக்கியம் ஆகியவற்றிற்கு மதிப்பளிப்பர். இல்லையேல் மற்றவர் இதில் ஈடுபடமாட்டார். உடலுறவில் பரித்தியாகம் இடம்பெறலாம். பலாத்காரம் இடம்பெறக்கூடாது. பலாத்காரம் இடம்பெற்றால் மற்றவர் பொருளாகிவிடுவார்.

இருவருக்கிடையிலும் கருத்துப்பரிமாற்றம் இடம்பெறவில்லையேல் - சுயநலம் ஏற்படத் தொடங்கும். இங்கே இருவருக்குமிடையில் உறவு உடையத்தொடங்கும். உடலுறவு சட்டப்படியான தொடர்பு அல்ல. அன்புத் தொடர்பே இதற்கு அவசியமாகிறது.

உடலுறவில் உள்ளாகும்போது ஆண், பெண் இருவருக்குமிடையில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. உடலுறவில் ஆண் அதை ஆசை உணர்வாக எண்ணுகிறான். அதனால் விரைவாக முடிக்க ஆசைப்படுகிறான். ஆனால், பெண்ணுக்கு அப்படியல்ல, கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

ஆண் பார்வையால், சிந்தனையால் உடனடியாக உடலுறவுக்கு ஆயத்தமாகிவிடுகிறான். சிறுதூண்டுதலில் அவன் ஆயத்தமாகிவிடுவான். ஆனால், பெண்ணுக்கு நீண்டநேரம் தேவையாகிறது. நேரடியான ஸ்பரிசத்தின் மூலம் உச்சநிலையை அடைகிறாள்.

ஆணிலால் அன்பு, விசுவாசம், சமாதானம், பாதுகாப்பை உடலுறவிலிருந்து வேறுபடுத்திப்பார்க்க முடிகிறது. ஆனால், இதைப் பெண்ணால் உடலுறவிலிருந்து வேறுபடுத்தமுடிவதில்லை. எல்லாம் ஒன்றிதத நிலை இருக்கும்.

இந்த வேறுபாடுகள் விவாக வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லவா? ஆணுக்கு உடலுறவில், அதிகநேரம் தேவையில்லை. ஆனால், பெண்ணுக்கு அதிகநேரம் தேவைப்படுகிறது. ஆதலால், பெண்ணை ஆண் ஆயத்தமாக்கவேண்டும். அன்புணர்வை ஏற்படுத்தி ஸ்பரிசத்தின் மூலம் அவளை ஆயத்தப்படுத்தவேண்டும் அவளது உணர்வை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இல்லையேல் அவளுக்கு ஆயத்தம் இல்லாது போய்விடும்.

மனைவியை ஆயத்தமாக்கவில்லையேல் அவர் கீழ்நிலையில் இருப்பாள். இதனால் போகப்போக அவளுக்கு உடலுறவில் விருப்பம் குறையத் தொடங்கும். இருவரும் ஒரேநேரத்தில் திருப்தியை அனுபவிக்கும் நிலைக்குவர இதைப்பற்றிய அறிவு தேவைப்படுகிறது.

பகல் முழுவதும் சண்டை, மனக்கசப்பான நிலையில் இருந்துவிட்டு இரவில் உடலுறவுக்கு ஆண் ஆயத்தமாகிவிடலாம். ஆனால், பெண்ணால் அப்படி முடிவதில்லை. சில பெண்கள் உடலுறவில் கணவனைப் பழிவாங்குவர். இது இருவரது உறவுக்கும் தடையாகலாம்.

(தொடரும்...)

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

வேண்டற்க வெ·்கிதும் ஆக்கம் விளைவாயின்
மாண்டற்கு அரிதுஆம் பயன்.

- திருக்குறள்

# நமது நோக்கு

## ஒப்புக்கு அரசியல் !

நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கையின் அரசியலமைப்பின்படி "சர்வவல்லமை பொருந்திய" ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் முயற்சியெடுத்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நடவடிக்கைக்காக - ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் பற்றி ஆராய்வதற்காக - அமைச்சர்கள் கே.என்.சொக்ஸி, திலக் மாரப்பன, ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கொண்ட உயர்மட்டக் குழுவொன்றையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் - இந்த முனைப்புக்கு, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்களிடமிருந்து முழுமையான ஒத்துழைப்போ, ஆதரவோ கிடைத்துவிடவில்லை என்பதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட - ஜனாதிபதியைப் பதவிநீக்கும் பிரேரணையைக் கொண்டு வருவது தமது இறுதி முயற்சியாகவே இருக்குமெனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மீதும், அமைச்சர்கள் மீதும் நேரடியான நெருக்குதல்களைப் பிறப்பித்து வந்தும் - அபிவிருத்தி லொத்தர் சபையைத் தன்னிஷ்டப்படி, பிரதமருடனான கலந்தாய்வின்றி தன்வசம் எடுத்துக்கொண்டு புதிய சவாலையும், அச்சுறுத்தலையும் உருவாக்கியதுமாக - அரசியற் போரொன்றைக் கட்டவிழ்த்து விட்டுள்ள நிலையிலும் - ஐக்கியதேசியக் கட்சியினர் - முழுமூச்சாகச் செயற்பட்டு ஜனாதிபதியை அகற்றுதவதற்குரிய எதிர்ப்பை வெளிப்படுத்தாமைக்கு என்ன காரணம் என்பதே, ஆராய்வுக்குரிய வினாவாகத் தொக்கிநிற்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருக்கும் ஜனாதிபதியை நேரடியாக எதிர்ப்பதனால் - அவர், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடலாம் என்ற அச்சம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கலாம்.

அல்லது - இதுபோன்ற குறுக்கீடுகளையும், அதிகாரப் பறிமுதல்களையும், அமைச்சுப் பொறுப்புக்களைக் கவர்ந்து கொள்வதையும் தொடர்ச்சியாக ஜனாதிபதி மேற்கொள்ளலாம் என்ற பயவுணர்வு அமைச்சர்களிடம் உண்டாகியிருக்கலாம்.

அல்லது - தற்போதைய நாடாளுமன்றத்தைத் தக்க வைத்துக் கொண்டே மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஜனாதிபதி நாட்டம் காட்டலாம் என ஐ.தே.க வினர் கருதியிருக்கலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பதவியிலிருந்து நீக்குவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறத்தவறினால் - அது தற்போதைய ஆட்சிக்கு முடிவைத் தரும் அச்சுறுத்தலாக, "பூமராங்" என அது தம்மையே தாக்கலாம் என ஐக்கியதேசியக் கட்சி எண்ணியிருக்கலாம் என காரணங்கள் நீண்டு சென்றாலும் -

ஜனாதிபதியைப் பதவிநீக்கும் பிரேரணை வெற்றி பெறுமாயின் - அது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பதவி நீக்க வழிவகுப்பதோடு நின்றுவிடாது - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிர்வாக முறைமைக்கான பேரிடியாகவும் அமைந்துவிடக்கூடும் என்பதையும் கவனத்திற் கொள்ளலாம்.

இலங்கையின் அரசியலமைப்பைப் பொறுத்தவரையில்- நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை பற்றிய விமர்சனங்கள், எதிர்ப்புக்கள், ஆட்சேபங்கள் இருந்தாலும் - "வராது கிடைத்த மாமணியாக" ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தைக் அள்ளிக் கொடுக்கும் ஒரு ஆட்சிமுறையை, ஆட்சிப் பீடத்திலிருப்பவர்கள் முற்றாகவே வெறுப்பார்கள் என்று எவரும் கூறிவிடமுடியாது.

இன்று - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பதவியிலிருந்து அகற்றுவது உவப்பானதாக இருந்தாலும் - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி நிர்வாக முறையைத் தூக்கியெறிய அவர்கள் உண்மையில் விரும்புவார்களா என்பது கேள்விக்குறியே.

இதற்கும் முக்கியமான காரணங்கள் சில உள்ளன.

அவற்றுள் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது இரண்டாவது பதவிக்காலத்தில் இருப்பதன் மூலம் - இனிமேலும் அடுத்ததொரு ஆட்சிக்காலத்திற்கு அவரால் ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொள்ள அரசியலமைப்பு இடம்கொடுக்காததும்,

ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்ப்பவர்கள் மத்தியில் - ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடக்கூடிய - அரசியல் ஆதரவை அபரிதமாகக் கொண்டவரெவரும் இதுவரை உருவாகவில்லை என்பதும்,

இந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி நிர்வாக முறையை உருவாக்கியவர் - பிரதமர் ரணிலின் மாமனாரும், ஐ.தே.கவின் அசைக்கமுடியாத தலைவருமாக விளங்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே என்பதும் குறிப்பிடவேண்டியனவாகும்.

எனவே - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பற்றியும், அதனை நீக்குவது தொடர்பாகவும் வெளியில் காரசாரமாக விவாதித்தாலும் - உண்மையில், ஐ.தே.கவுக்கு அது மனதுக்கிசைந்த செயலாக இருக்காது என்பது வெளிப்படையானது.

இந்த வகையில் - அடுத்த ஜனாதிபதி பதவியைக் குறிவைத்துச் செயற்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, அல்லது ஐ.தே.கவின் தலைவர்களோ - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பதவிநீக்கும் பிரேரணைக்கு முழுமுயற்சியெடுத்து - அப்பதவியை நாடாளுமன்றினால் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்துவார்களா என்பது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது.

---

### பளை கல்விக் கோட்டத்தில்

# படைமுகாம்கள் அமைந்துள்ளதால் 3 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில்!

(பளை)

சொந்த இடத்தில் பளைக் கோட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளை மீள இயக்கமுடியாது இருப்பதாக கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்வி பணிப்பாளர் வ.அரியரத்தினம் தெரிவித்தார்.

இராணுவத்தினர் இந்தப் பாடசாலைகளில் நிலைகொண்டுள்ளதாலேயே, இம்மூன்று பாடசாலைகளையும் சொந்த இடத்தில் இயங்கவைக்க முடியாதுள்ளது.

கிளாலி, அல்லிப்பளை, முகமாலை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளையே மீள இயக்க முடியாதுள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் பளைப் பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்தத்தினால் பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 13 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டன. 5000 இற்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும் இப் பாடசாலைகளைப் புனரமைத்துக் கொடுக்க இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இப்போது இப்பாடசாலைகள் தற்காலிகமாக வேறிடங்களில் இயங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

---

## தேனிலவுக்கு கொழும்பு வந்த ட்ராவிட் தம்பதியர்!

(கொழும்பு)

இந்தியக் கிரிக்கெட் வீரர் ராகுல் ட்ராவிட் தேனிலவைக் கழிப்பதற்காக தனது மனைவியுடன் இலங்கை வந்துள்ளார். ராகுல் ராவிட் பெங்களூரைச் சேர்ந்த வஜீதா பெந்தர்கர் என்ற பெண்ணைக் கடந்த வாரம் திருமணம் செய்தார்.

இவர் தேனிலவுக்காக இலங்கை வந்துள்ளார் என்றும், ரசிகர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் கண்களில் அகப்படாமல் சுற்றுலா ஸ்தலங்களுக்கு இவர்கள் சென்று வருவதாகவும் கூறப்படுகிறது.

---

## அரசாங்க அச்சகத்தை மீளத் திறக்க உத்தரவு!

### ஊடகத்துறை அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

பொரளையிலுள்ள அரசாங்க அச்சகத்தை உடனடியாகத் திறக்குமாறு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உத்தரவிட்டுள்ளார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி தன்னிச்சையாக பொறுப்பேற்றதையடுத்து வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவதற்கு ஏற்பாடாகி இருந்தவேளை, அச்சகம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து - கடந்த வெள்ளியன்று மூடப்பட்ட அரசாங்க அச்சகத்தினைத் திறந்து மீள இயக்குமாறு, மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார். (01)

---

## பெண் அதிகாரிகள் இருவர் பிரிகேடியர்களாக தரமுயர்வு

(கொழும்பு)

இராணுவத்தில் இரண்டு கேணல் தர பெண் அதிகாரிகள், பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் மருத்துவப் படைப் பிரிவைச்சேர்ந்த கேணல் சிறியானிவர்ஷ விதாரண, கேணல் சந்திரா ஜெயவீர ஆகியோரே பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் இப்போது நான்கு பெண் பிரிகேடியர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### சாவகச்சேரிப் பகுதியில்

# பிரதேச சபை அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடங்களை, பிரதேசசபை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாகச் சாவகச்சேரிப் பிரதேச எல்லைக்குட்பட்ட நுணாவில், கைதடி பகுதிகளில் அண்மைக் காலங்களில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்களை அகற்றவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இனிவரும் காலங்களில் சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் சேதம் அடைந்துள்ள கட்டடங்களைப் புனரமைப்புச் செய்யவோ, புதிய கட்டடங்களை அமைக்கவோ பிரதேச சபையின் அந்தந்த பகுதி உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும்,

இவ்வாறு அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும் எனவும், சாவகச்சேரி பிரதேச செயலர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

---

## சந்திரிகா - ரணில் முரண்பாடு; தீர்க்க இந்தியா வற்புறுத்து!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து இரு தரப்பினருடனும் இந்தியா தொடர்புகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தனது தூதரகம் மூலம் இருதரப்பினரிடமும், தென்னிலங்கையில் அரசியல் ஸ்திரநிலையை ஏற்படுத்த வேண்டும் என இந்தியா கேட்டுள்ளது.

இருதரப்பு முரண்பாடுகள் - இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இடையூறாக இருந்தால், புலிகளைக் கட்டுப்படுத்தமுடியாத நிலைமை ஏற்படும் என்றும் இந்தியா தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

---

## வாகன அனுமதி பெறுவதில் வன்னி சாரதிகளுக்கு சிக்கல்!

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டத்தில் வசிப்போர் சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்களென தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சாரதிகள் தமது சாரதி அனுமதிப் பத்திரத்தை வவுனியா பிரதேச செயலகத்தில் புதுப்பித்து வந்தனர்.

ஆனால், தற்போது வவுனியா செயலக அதிகாரிகள் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளதால் - கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் - வன்னியில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் வெளி மாவட்டங்களிற்கு தமது கடமைச் செயற்பாட்டிற்காகச் செல்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

---

# ஒய்வூதிய, சேமலாபநிதி முறைகேடுகள் மனிதஉரிமை ஆணைக்குழு விசாரிக்கும்

(கொழும்பு)

ஓய்வுபெற்ற ஊழியர்களின் ஓய்வூதியம், சேமலாப நிதியக் கொடுப்பனவுகளில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இத்தகைய மோசடிகள் சம்பந்தமாக நாட்டின் பல பாகங்களிலிருந்தும் 318 முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை அழைத்து, முறைப்பாடுகளை விசாரிப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கண்டி, அம்பாறை, மாத்தறை, மட்டக்களப்பு ஆகியன அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன. வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில இருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கடல்வேங்கை எழுந்திட்ட தமிழீழம் இனி கனவாகிப்போகாது ஒருநாளும்



**பண்டாரநாயக்கா குடும்பத்துடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த ஒரு தமிழ்க் குடும்பத்தைக் கதிர்காமர் சார்ந்தவராயினும், அவரது அரசியற் பிரவேசம் சடுதியானதே. மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிர்காமர் லக்ஸ்மணநாதன் சிறுபராயத்திலேயே கொழும்பு வாசியாகவும் மாறிவிட்டவர்.**

**சுமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு 62 வயதில் தன்னை அரசியலிற்குள் நுழைத்துக்கொண்ட கதிர்காமர், வெளிவவகார அமைச்சராக நியமிக்கப்பட்டவுடன் தமிழீழ விடுதலைப் போரிற்கெதிரான கருத்தை, வெளியுலகிற்கு இட்டுச்செல்வதற்காகத் தமிழன் என்கிற தராதரத்தைப் பயன்படுத்திச் சிறீலங்கா வெளிவிவகாரத் துறையின் புதிய பரிமாணத்திற்கும் வித்திட்டவர்.**

**சிங்களத்தின் சுயநலத்திற்காகத் தான் தாராளமாகப் பயன்படுத்தப்படுகிறேன் என்பதை அறிந்தும், உல்லாச வசதிகளுக்காக அதனை ஏற்றுச் செயற்படும் கதிர்காமர் 1950 களின் இறுதியில் லண்டன் சென்று ஒக்ஸ்போட்டில் தன்னை இணைத்துக்கொண்டவர்.**

**அதன் பின்னான காலத்தில் லண்டன் பிரிவு கவுன்சில் வழக்கறிஞராகக் கடமையாற்றிய கதிர்காமர்- 1970களின் ஆரம்பத்தில் உலகத் தொழிலாளர் அமைப்பின் ஆலோசகராகக் கடமையாற்றிய பின் அனைத்துலக அறிவுப்பிழைப்பாளர்கள் காப்புரிமை அமைப்பின் இயக்குநராக 1988 வரை கடமையாற்றினார். 1966 ஆம் ஆண்டில் வியட்னாமில் இடம்பெற்ற கிறிஸ்தவ- இஸ்லாமியக் கலவரம் தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச் சபையின் தனிநபர் ஆணையராகக் கடமையாற்றிய அனுபவமும் இவருக்குண்டு.**

**கனடாவிலிருந்து சுதர்மா**

கடந்த ஆறாம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்ததான உரையொன்றை நாடாளுமன்றில் நிகழ்த்தியிருந்தார்.

அதிகாரத்தைப் பகிர்வதற்கான பாதை வரைவொன்றில் தாம் ஈடுபட்டுள்ளதான செய்தியோடு, இந்தச் சமாதானப் போக்கைச் சார்ந்த ஒரு பாதுகாப்பு வலைப்பின்னலாக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், இந்தியா என்பன இருக்கின்றன என்ற செய்தியையும் தெரிவித்து - அடுத்த வாரமளவில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் மற்றும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் -இலங்கைக்கு வரவிருப்பது வரையான சகல தகவல்களையும் அவரது உரை உள்ளடக்கியிருந்தது.

இந்த அறிக்கை சார்ந்த உரையொன்றைக் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் நிகழ்த்தியிருக்கிறார் லக்ஸ்மன் கதிர்காமர். தேசியப் பட்டியல் மூலமான நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் லக்ஸ்மனநாதனிற்கு இன்னொரு பெரிய தகுதியும் உண்டு.

அதாவது, சிறீலங்காவின் ஆட்சியமைப்புகளின் தலைவரான ஜனாதிபதிக்கான வெளியுறவுத்துறை ஆலோசகர் என்பதே அது. இந்த ரீதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தியோகப்பற்றற்ற பேச்சாளரும் அவரே. இந்தவகையில், அவரது இந்த நாடாளுமன்ற உரை முக்கியமானதொரு விடயமாகும். அதுவே எமது கரிசனைக்கு உட்பட்டிருக்கும் விடயமாகவும் அமைவுபெறுகிறது.

கதிர்காமரின் உரைகள், பேட்டிகள் என்பன தமிழர் தரப்பின் மீதான காழ்ப்புணர்வின் உச்சக் கட்டமாகவே கடந்த காலங்களில் தோற்றமளித்தன. ஆனால், இம்முறை அவரது உரை அவற்றிற்கு மாறாக சிங்களத்தை அச்சப்படுத்தும் வகையில் அமைவு பெற்றுள்ளது.

அத்தோடு, உளவியல்ரீதியான சோர்வொன்றைச் சிங்களத்திற்கு ஏற்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது இந்த உரை. மறுபுறத்தே சிங்களத்தின் யதார்த்தத்தை உணர்த்தி நிற்கிற இவ்வுரை, தற்போதைய பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அது விரும்புவதைத் தெரிவித்து நிற்கிறது. இதுவே தம்மைப் பலப்படுத்த வேண்டிய தேவையைத் தமிழர் தரப்பிற்கு மீண்டும் வலியுறுத்தி நிற்கிறது. பிரதமரின் உரை எவ்வாறு சமாதானத்தின் சாதகத்தை உரைத்து, மக்களிற்கு நம்பிக்கை ஏற்படுத்துவதாய் அமைந்ததோ, அதற்கு



கடற்புலிகளின் வளர்ச்சி - பெரும் தாக்கத்தைக் கொண்டது.

மறுபுறமாகச் சந்திரிகாவின் சந்தேகங்களை எழுத்தில் வடித்ததாய் அமைந்துள்ள கதிர்காமரின் உரை அறிவித்து நிற்கிற முதல் அறிவிப்பே இலங்கையின் இறையாண்மை பற்றியது.

இறையாண்மை என்பது இன்றைய திகதியில் ஏட்டளவிலேயே இருப்பதாகவும், எதிர்காலத்தில் இலங்கையில் இறையாண்மை என்பது ஒப்புக்குப் போர்த்திய திரையாகவே இருக்கப்போகிறது என, எச்சரித்துள்ளார் கதிர்காமர். அது கூட ஆட்சி, அதிகாரம், சட்டம், நீதி- நிர்வாகம், பிரதேச வரையறை, நாட்டின் பிரஜைகளைப் பாதுகாத்தல் என்பன அறவே இல்லாமல் போய் விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது, இலங்கையின் இறையாண்மையை இல்லாது செய்யும் ஒரு ஒப்பந்தம் என்ற குற்றச்சாட்டோடு ஆரம்பிக்கும் அவரது உரை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன் பிரதமர்- ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என்றும், அப்படியிருந்தால் இந்த நிலைக்கு நாடு இட்டுச் செல்லப்பட்டிருக்காது என்றும் கூறியதோடு, ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நாட்களிலேயே சிங்களத்தை இரண்டுபடுத்தும் காரியம் நடந்துவிட்டது என்று ஆதங்கப் பட்டிருக்கிறார் கதிர்காமர்.

நாட்டின் தலைவி, அரசின் தலைவி, அமைச்சரவையின் தலைவி- ஆயுதப்படைகளின் பிரதம தளபதியின் நம்பிக்கையைப் பெறுவதற்குத் தவறிவிட்டது என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

அதன்பிறகு, நேரடியாகவே கடற்புலிகள் சம்பந்தமான ஒப்பந்தச் சரத்துக்களிற்குத் தாவும் கதிர்காமர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 1.2 ஐச் சமருக்கு இழுக்கிறார். வலிந்து சண்டைக்கு இழுக்கும் கடற் தாக்குதல்களை இரு தரப்புமே மேற்கொள்ளக்கூடாது என்கிற இச்சரத்தானது, கடற்படையின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்துகிற சரத்தாகச் சுட்டிக் காட்டிய கதிர்காமர் -

சரத்து 3.2 ஒப்பந்தத்தைப் பற்றிய இறுதி விளக்கத்தை எடுக்கின்ற பொறுப்பு 'வெளிநாட்டவரான' கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு உள்ளதானது, நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில், அதன் நீதித்துறை செயற்பட முடியாதவாறு தடுத்து நிற்கிறது எனக் குற்றஞ் சாட்டுகிறார்.

இவ்வாறு, தனது ஆரம்பக் குற்றச்சாட்டை முன்னிறுத்தும் கதிர்காமர்- கடற்புலிகளின் செயற்பாடு பற்றிய கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகள் மீது அடுத்ததாகத் தாவுகிறார். புரிந்துணர்வு ஒப்பந்தப் பிரகாரம் அரசு - குறிப்பாகக் கடற்படை கடற்புலிகளை ஒரு நிழலரச படையாகக் கருதவேண்டும் என்கிற பரிந்துரை மீதான வன்மத்தைத் தெரிவிக்கும் கதிர்காமர்- சிறீலங்கா கடற்படையும், கடற்புலிகளும் தமது கடற்பயிற்சிக்கான பிரதேச வரையறை, கூட்டுப் பயிற்சிக்கான ஓட்டப் பாதை என்பவற்றை வரையறுக்க வேண்டும் என்ற கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகள் பல இடங்களில் தவறாகப் பயன்படுத்தும் வாய்ப்புள்ளதாகச் சிங்களத்திற்கு அபாய அறிவிப்பு விடுக்கிறார்.

(நாளை தொடரும்)

# ஒற்றையாட்சிப் பொது நிர்வாகமுறையினை தன்னகத்தே கொண்டிருக்கும் இந்திய சமஷ்டி

**சுயநிர்ணயம் ஒரு பார்வை**

**பகுதி–33**

**வேலும்மயிலும் சேந்தன்**

சாதி ரீதியாக நோக்கும்போது, அடக்குமுறைக்குட்பட்ட சாதியினரை அல்லது மிகவும் பின்தங்கிய சாதியினரை "அட்டவணைப்படுத்திய சாதிகள் (Sheduled Castes) என்றும், இனக்குழுக்கள் (Tribals) என்றும் வகுத்துள்ளது.

அவர்களுக்கு இதுவரை எந்த



இந்திரா காந்தி

விதமான சுயாட்சித் தீர்மானங்களையும் வழங்காமல், மத்திய அரசாங்கம் தானே தொழில்வாய்ப்பு, கல்வி வாய்ப்பு போன்ற விடயங்களில் சில சலுகைகளை வழங்கி வருகின்றது.

ஆனால் - கனடா, ஸ்பெயின் போன்ற நாடுகளைப் பார்ப்போமாயின், சிறுபான்மையினருக்கு சுயாட்சி அதிகாரத்தினை, அவை- சமஷ்டித் திட்டங்களுக்குக் கீழ் வழங்கியுள்ளன. சமஷ்டி அரசுகளே அவர்களது விடயங்களைக் கையாளவதையும் நாம் அவதானிக்கலாம்.

எனவே, இந்திய மக்களை சமூகவியல் அடிப்படையில் நோக்கும் போது, மொழியையும், மதத்தினையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் தொகுதிகளாக வகுத்து அவர்களை மாநிலங்களுக்குரியவர்களாக அடையாளப்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

ஆனால், அவர்களுக்கு வேண்டிய சுயநிர்ணயம் அல்லது அதன் அடிப்படையான சுயாட்சி அதிகாரம் சமஷ்டித் தத்துவப் பின் னணியில் வழங்கப்படவில்லை.

இந்திய அரசியற்றிட்டத்தின் சரத்துக்கள் 155, 156, 356 என்பன இந்தியாவை ஒரு ஒற்றையாட்சி நாடாக வைத்திருக்கக்கூடிய சூழ்நிலையில் அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

இந்த அடிப்படையிலேயே, இந்திய அரசியல் அமைப்பின் இரட்டை ஆட்சிமுறையானது - மக்களின் சிந்தனைகளில் பிராந்திய வாதங்களை உருவாக்கியதே தவிர, உண்மையான சமஷ்டி அரசுகளை உருவாக்கவில்லை என, ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்தியா 1947 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து காலனித்துவ விடுதலையை அடைந்த பின்னர், தன்னைப் பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டியதும், தனது மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பாரிய திட்டங்களுக்கு ஊடாக முன்னேற்ற வேண்டியதுமான தேவைப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

இவ்வாறு துரித கதியில் பொருளாதார முன்னேற்றத்தினை அடைய வேண்டுமாயின், அந்நாடு ஒற்றையாட்சி முறையையே பின்பற்ற வேண்டும் என, இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு கருதியிருந்தார்.

நேரு அவ்வாறு கருதியது மட்டுமன்றி - அவர் இங்கிலாந்தின் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலே கல்வி கற்கும்போதே, சுதந்திர இந்தியாவின் பொருளாதார மேம்பாடு பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தலைப்பட்டிருந்தார் என, நேருவின் வாழ்க்கை வரலாற்றினை எழுதிய அறிஞர்கள் கூறுகின்றனர்.

அந்தவகையில் விரைவானதும், திடமானதுமான தீர்மானங்களையும், திட்டமிடல்களையும் செய்வதற்கு மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட ஒற்றையாட்சி முறையையே அவர் விரும்பியிருந்தார்.

ஆனால், நேருவிற்கு நேர் எதிர்மாறாக, இந்தியாவின் தேசபிதா என இன்றும் கருதப்பட்டு வருகின்ற மகாத்மாகாந்தி - மொழிவாரியாகவும், இனவாரியாகவும் பிராந்தியங்களைப் பிரித்து அதிகளவான சுயாட்சியினை வழங்க விரும்பினார். அத்துடன், இந்திய மக்கள் அனைவரும் தனது அகிம்சைக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும், எளிமையான வாழ்க்கைமுறையைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்களாக இருக்க வேண்டும் என அவர் கருதினார்.

இவ்வாறு இந்தியா சுதந்திரமடைந்த காலகட்டத்தில், இரு வேறுபட்ட சிந்தனைத் தளங்கள் இந்தியத் தலைவர்களிடம் காணப்பட்ட போதும், சுதந்திர இந்தியாவின் பதவிகளுக்கும், அதிகாரங்களுக்கும் வந்த தலைவர்களிடையே நேருவின் கொள்கையே அதிகம் வலுப்பெற்றுக் காணப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, நேரு - இந்தியாவின் பொருளாதார முன்னேற்றங்களை அதிக கவனத்தில் எடுத்துச் செயற்பட ஆரம்பித்தார். அப்போது இந்தியாவில் ஆட்சி அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த சமஸ்தானங்களின் செயற்பாடு, இந்தியாவில் ஒற்றையாட்சியின் மூலமே - ஒருமித்ததும், விரைவானதும், வினைத்திறனுமான நிர்வாகத்தினைக் கொண்டு நடத்தலாம எனக் கருதவேண்டிய நிலைக்கு நேரு தள்ளப்பட்டார் என, இந்தியாவின் பொது நிர்வாகத்தினைப் பற்றி எழுதுகின்ற அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இந்தியாவின் சிக்கலான பன்மைத்துவம் - இன, மத, மொழி வேறுபாடுகளைக் கொண்டமைந்த நிலப்பரப்பு என்பன இந்தியாவைப் பிராந்தியங்களாக வரவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளின.

இதனாலேயே 1956 ஆம் ஆண்டு இந்தியாவின் மாநிலங்களை மீளமைக்கும் செயற்பாடுகளை இந்திய அரசு மேற்கொண்டதாகத் தெரிய வருகிறது. அத்துடன், இந்தியாவின் பன்மைத்துவம் என்றுமே எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத யதார்த்தமாகக் காணப்பட்டது.

இந்தியாவின் சமஷ்டியை ஆய்வு செய்யும் அறிஞர்கள் இந்தியச் சமஷ்டியை ஒரு "அரைச் சமஷ்டி"



மகாத்மா காந்தி

எனக் கூறுகின்றார்கள்.

ஏனெனில், மேற்கூறிய பின்னணியிலே இன ரீதியாகப் பிராந்தியங்களை வகுத்துவிட்டு, அதற்கு முரண்பட்ட வகையில் நிர்வாகக் கட்டமைப்பினை, ஒற்றையாட்சி முறையாக அல்லது பொதுநிர்வாக விடயங்களை அமுல்படுத்தும் கட்டமைப்பினை இந்தியா பேணிககாத்து வருகின்றது என்பதாலேயே அப்படிக் கூறப்படுகிறது. (தொடரும்)

# செச்னியாவில் குண்டுத் தாக்குதல் பாதுகாப்புச்சேவை கட்டடம் சேதம்!

## கட்டடத்தினுள்ளிருந்த 30 பேர் பலி




(செச்னியா)

செச்னியாவில் சமஷ்டி பாதுகாப்புச் சேவையின் நிர்வாக கட்டிடத்தின் மீது செச்னியப் பேராளிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 30 பேர் பலியாகியுள்ளனர்.

லொறி ஒன்றில் வெடிமருந்து நிரப்பப்பட்ட லொறி கட்டடத்தின் மீது மோதவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலில் கட்டடத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டு வருவதால் கொல்லப்பட்டவர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாம் எனக் கூறப்படுகிறது. பலர் இடிபாடுகளிடையே சிக்கியுள்ளதாகவும் நம்பப்படுகின்றது.

ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து, செச்னியாவை விடுவிக்க, அங்கு செச்னியப் போராளிகள் போராட்டம் நடத்திவருவது தெரிந்ததே.

# ஈராக்கை நிர்வகிப்பதற்கு மீண்டும் புதிய அதிகாரி!



புஷ்ஷுடன் பிறேமர்

அமெரிக்காவின் - ஈராக்கிற்கான புதிய நிர்வாகி போல் பிறேமர் (வயது 61) ஈராக் வந்துசேர்ந்துள்ளார். முன்னாள் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணரான இவர், அமெரிக்காவின் உயர்நிலையில் உள்ள சிவில் அதிகாரியாவார். இவர் தற்போது ஈராக்கின் இரண்டாவது பெரியநகரான பஸ்ராவில் தங்கியுள்ளார்.

இவருடன், தற்போது ஈராக்கின் அமெரிக்க நிர்வாகியும், முன்னாள் படையதிகாரியுமான ஜெனரல் ஜேய் கார்னரும் உடன் சென்றுள்ளார்.

பக்தாத்தை நிர்வகிக்க அமெரிக்காவினால் நியமிக்கப்பட்ட பார்பரா பேர்டின், அங்கு சீர்குலைந்துள்ள அத்தியாவசிய சேவைகளை - மீளச்சீராக்குவதில் காட்டிய 'தாமதத்தையடுத்து, அவர் மீண்டும் அமெரிக்காவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க சிவில் நிர்வாகத்தினால் ஈராக்கியர்களிடையே கொந்தளிப்பு நிலை உருவாகி வருவதாக அங்குள்ள மேற்குலக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

பக்தாத்தில் மின்சாரம், நீர்விநியோகம் என்பன இன்னும் சீரடையவில்லை. வீதிகளில் கழிவுகள் அகற்றப்படாமல் காணப்படுகின்றது. வர்த்தகர்களும் தமது கடைகளை மீள ஆரம்பிக்க அச்சம் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர்கள் போதிய சம்பளம் வழங்கப்படாமையினால் ஒழுங்காகப் பணிபுரிவதில்லை எனக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

# ஐரோப்பிய யூனியனில் இணைய லிதுவேனியாவுக்கு அனுமதி!



கருத்துக்கணிப்பில் வாக்கு எண்ணப்படுகின்றது

ஐரோப்பிய யூனியனில் இணைவதா? இல்லையா? என்பது குறித்து லிதுவேனியாவில் நடைபெற்ற மக்கள் கருத்துக்கணிப்பில், லிதுவேனியா - ஐரோப்பிய யூனியனில் ஓர் அங்கத்துவ நாடாக இணைய மிகப்பெரும் மக்களாதரவு கிடைத்துள்ளது.

91 சதவீதமானோர் ஐரோப்பிய யூனியனில் இணைய ஆதரவு தெரிவித்திருக்கும் அதேசமயம், 9 சதவீதமானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். 64 சதவீதமானோர் கருத்துக்கணிப்பில் வாக்களித்துள்ளனர்.

லிதுவேனியா - முன்னாள் சோவியத் குடியரசின் ஒரு மாநிலமாகும். ஐரோப்பிய யூனியனில் இணையவிரும்பும் 15 நாடுகளில் இதுவுமொன்றாகும்.

## ஈரான் ஜனாதிபதி முஹமட் கதாமி லெபனான் விஜயம்!

(ஈரான்)

ஈரானிய ஜனாதிபதி முஹமட் கதாமி லெபனானுக்கு முதன்முதலாக விஜயம் செய்துள்ளார். ஜனாதிபதி கதாமியை அங்குள்ள ஏராளமான ஷியா முஸ்லிம்கள் வீதியெங்கும் திரண்டுநின்று வரவேற்றனர்.

சதாமின் வீழ்ச்சிக்குப் பின், லெபனான்- அமெரிக்காவின் கடும் அழுத்தத்துக்கு உட்பட்டு வருகிறது. எனினும், லெபனானுக்கு - ஈரானும், சிரியாவும் தமது ஆதரவைத் தெரிவித்துவருவது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

# கத்தோலிக்க மாணவர்களை கடத்திய உகண்டா ஆயுதக்குழு

## தேடி இராணுவம் நடவடிக்கை



(கம்பாலா)

உகண்டாவில் கத்தோலிக்க அருட்தந்தையர்களாக பயிற்சி பெற்று வந்த 40 இளைஞர்களை கடத்திச்சென்ற ஆயுதக்குழுவினரை உகண்டா இராணுவம் தேடிவருகிறது.

கடந்தவார இறுதியில் நடைபெற்ற இந்த கடத்தல் சம்பவத்தைத் தொடர்ந்து, சுமார் 100 உகண்டா இராணுவத்தினர் தேடுதலில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறன்று லக்கோர் கனிஷ்ட செமினரி பயிற்சி நிலையத்திலிருந்த இந்த மாணவர்கள் கடத்தப்பட்டபோது நடைபெற்ற வன்முறையில் - எட்டுவயதுச் சிறுவன் ஒருவன் ஆயுதக் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான்.

எல்.ஆர்.ஏ. என்னும் அமைப்பு, தனது இயக்கத்தில் இணைக்கவே இந்த மாணவர்களைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

# பிரிட்டிஷ் பிரதமருடன் முரண்பாடு; பெண் அமைச்சர் ராஜினாமா!



றொனி பிளயர், பின்னால் கிளேயர்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் றொனி பிளேயர், ஈராக்கின் எதிர்காலம் குறித்த தனது வாக்குறுதிகளை மீறிவிட்டார் எனக் குற்றஞ்சாட்டி, பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தி பிரிவின் செயலாளர் கிளேயர் ஷோட் தனது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இவரது இடத்துக்கு புதிதாக பார்னோஸ் ஆமோஸ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். கிளேயர், ஏற்கனவே பிரதமர் பிளேயருடன் ஈராக் மீதான படையெடுப்பு விவகாரத்தில் கருத்து முரண்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிய மாணவிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஆயுததாரி. சிவில் நிர்வாகம் அங்கு இன்னமும் ஏற்படுத்தப்படாததால், பெண்கள் மீதான வன்முறைகளும் அங்கு உச்சமாயுள்ளன.



ஈராக்கில் அணு ஆயுதத் தொழிற்சாலை எனச் சந்தேகிக்கப்படும் பகுதியொன்றுக்கு காவலில் ஈடுபட்டுள்ள அமெரிக்கச் சிப்பாயைப் படத்தில் காணலாம்.



ஈரானிய ஜனாதிபதி கதாமியை வரவேற்கும் லெபனான் பெண்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மண்டபம் முகாம் அகதிகளை திருப்பியனுப்ப இந்தியா பேச்சு

(சென்னை)

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்திலுள்ள மண்டபம் அகதி முகாமிலிருந்து, ஈழத்தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது குறித்து, இந்திய - இலங்கை அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக, இந்திய உள்துறை அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் நிலைமைகள் தற்போது சுமுகமடைவதால், அகதிகளை இப்போது திருப்பியனுப்ப முடியும். அகதிகளும் இதையே விரும்புகின்றனர் என்பதை நான் அங்கு நேரில் சென்றபோது உணர்ந்தேன் என இந்திய உள்துறை அமைச்சின் விசேட செயலர் ஆர்.கே. சர்மா தெரிவித்தார்.

தமிழகப் பொலிஸ் மற்றும் கரையோரக் காவற்படை அதிகாரிகளுடனும் நேற்று, சர்மா பேச்சு நடத்தியிருந்தார்.


We believe
the right people choose the right way
54A, Palaly road
Kantharmadam
STP
கணனிக் கல்வியில் ஓர் உச்சாணி
புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-03
T.P: 2222674 (சி-920)

## ஏிந்த குப்பைக்குள் வெடித்த பொருள்!

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளவினுள் எரிந்துகொண்டிருந்த குப்பையில், திடீரென மர்ம வெடிபொருள் வெடித்ததில் - இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை அரியாலை முள்ளிப் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில்- மேஜன்ஸ் ஜென்கோல் (வயது 15) என்பவர் காயமடைந்தார்.

இவர் தற்போது, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வங்கத் தாழமுக்கம் இந்தியா நோக்கி!

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில், தென்மேற்குப் பகுதியில் நிலவிய தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட சூறாவளி, நேற்று மாலை யாழ்ப்பாணத்திற்கு வடகிழக்கில் 650 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்தது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது இந்தியாவை நோக்கி நகரக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பெரும்பான்மையற்றவர் என்பதை ஜனாதிபதி உணர்ந்தாக வேண்டும்

## பட்டி வீரக்கோன் எச்சரிக்கின்றார்

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளமை, அரசியல் யாப்பு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று லங்கா சமசமாசக் கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி என்ற முறையில் ஒரு அமைச்சை அல்லது ஒரு அமைச்சின் ஒரு பகுதியை பொறுப்பேற்கின்ற அரசியல் யாப்பு உரிமை ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு இருந்த பெரும்பானமையைத் தான கொண்டிருக்கவில்லை என்பதை, இன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புரிந்துகொள்ளவேண்டும் என்றும் பட்டி வீரக்கோன் கூறியிருக்கின்றார்.

தாம் அமைச்சர் பதவி எதையும் வைத்திருக்காத நிலையில், இன்னுமொரு அமைச்சைச் சுவீகரிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளதா என்பது சட்டரீதியான வினா என்றும் பட்டி வீரக்கோன் கூறியுள்ளார்.

# ஜனாதிபதியின் உத்தரவையடுத்து அரச அச்சகத்தில் இழுபறி நிலை!

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துக் கொண்ட விவகாரத்தால், அரச அச்சகக் கூட்டுத்தாபனம் மூடப்பட்ட விடயத்தில் நடந்த சர்ச்சைகள் பற்றிய தகவல்கள் வெளியாகிவருகின்றன.

கடந்த வியாழன்று ஜனாதிபதி- விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை உடனடியாகப் பிரசுரிக்குமாறு கோரி, அரச அச்சகக் கூட்டுத்தாபனத் தலைவர் நெவில் நாணயக்காரவைப் பணித்திருந்தார். அத்துடன், நேற்று அனுப்பப்பட்ட மற்றுமோர் அறிவுறுத்தலிலும்- தான் அனுப்பிய விசேட வர்த்தமானி அறிவித்தலை தாமதமின்றி உடனடியாகப் பிரசுரிக்குமாறு ஜனாதிபதி மீண்டும் அறிவுறுத்தியிருந்தார்.

எனினும், அரச அச்சகத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் - ஜனாதிபதியின் விசேட வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிக்க வேண்டாம் என அரச அச்சகத்தைப் பணித்தார்.

அதேசமயம், சட்டமா அதிபரின் தீர்ப்புக் கிடைக்கும்வரையில் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலைப் பிரசுரிக்கப் போவதில்லை என அரச அச்சகக் கூட்டுத்தாபனத் தலைவர் நெவில் நாணயக்காரவும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், சீல்வைத்து மூடப்பட்ட அரச அச்சகம் நேற்றுமுதல் இயங்கத்தொடங்கிய போதிலும், ஜே.வி.பியின் கட்டுப்பாட்டிலுள்ள தொழிலாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் அநேகமான ஊழியர்கள் பணிக்குத் திரும்பவில்லை.

# ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர் துப்பாக்கிச் சூட்டில் காயம்!

அம்பாறை மாவட்டம் செருக்கல் முனையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினராகிய அந்தோனிப்பிள்ளை தேவராசா, அவரது மனைவி கத்தரினா ஆகியோர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு கடையைப் பூட்டிவிட்டு இவர் வீட்டிலிருந்த வேளை, கடைக்கு முன்பாக வெடிச் சத்தம் கேட்டதாகவும், அந்நேரம் மனைவியுடன் வெளியே சென்றபோது, இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

1995 ஆம் ஆண்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியில் இருந்து இவர் விலகினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## கைதடி சைவச் சிறுவர் இல்ல விவகாரம்

# விளக்கமறியலை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்கு!

கைதடி சிறுவர் இல்லத்தில் நடந்த முறைகேடுகள் காரணமாக, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று சந்தேக நபர்கள், தங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் - தமக்கு தலா 5 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு கோரியும் உயர்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுக்களில்- சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரியும், சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்துசமயப் பேரவையால் நடத்தப்படும் சிறுவர் இல்லத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, சாவகச்சேரி நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில், தாம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே பிணையில் விடப்பட்டும், விளக்கமறியலில் வைத்திருப்பதனாலேயே - தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, நஷ்டஈடு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் - சிங்கள கலைவிழா!

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும், தமிழ் - சிங்கள கலைஞர்களின் கலைவிழா, நாளை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. காலை நிகழ்வில் மிராண்டா ஹேமலதாவின் செயல் விளக்கங்களுடனான சிங்களப் பாரம்பரிய நடனங்கள், 'தொப்பி வியாபாரி' எனும் சிங்கள நாடகம், 'என்னைப் பார்' என்ற ஆங்கில நாடகம் என்பன மேடையேறுகின்றன.

மாலை நிகழ்வில்- வசந்த ஒபயசேகராவின் சிங்களத் திரைப்படம், புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' எனும் தமிழ் நாடகம், எதிர்வீர சரத்சந்திரவின் 'சிங்கபாகு' எனும் சிங்கள நாடகம், சிங்கள நடனக் கோலங்கள் என்பன இடம் பெறுகின்றன.

### திருமலையில்...

இடிமின்னலும் பலமாகக் காணப்பட்டது.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த மண்டலமே இதற்குக் காரணம் எனக்கூறப்படுகின்றது.

### பிரபாவுடன்...

வித தடைகளும் இன்றி அவை தொடரவேண்டும் என்ற தனது விருப்பத்தை, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தம்மிடம் தெரிவித்ததாக நோர்வே தூதரகம் நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

### கூட்டமைப்பு...

இந்தச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சிலிருந்து தற்காலிகமாக விலகியமை தொடர்பாகவும் தற்போதைய அரசியல் நிலை பற்றியும் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

# செலான் வங்கி கடனுதவி வழங்கும்

யாழ். குடாநாட்டில் யுத்தம் காரணமாக பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கும், கடற்தொழிலாளர்களுக்கும் கடனடிப்படையில் உதவுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள செலான் வங்கி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் மாலை - யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில், வங்கி முகாமையாளர் திருமதி ரோகிணி நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்- நிர்வாக முகாமையாளர் டீ சில்வா, பிராந்திய முகாமையாளர் ரஞ்சன், வங்கியின் பிரதான முகாமையாளர் இரட்ணசிறி ஆகியோர் கலந்து கொண்டனர். (சு)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.89 | 97.30 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.93 | 156.44 |
| 1 யூரோ | 108.21 | 109.60 |
| 1 சுவிஸ் பிராங் | 71.50 | 72.82 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 60.59 | 61.80 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.91 | 25.91 |

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் நாகபூரணம்

**(போஸ்கோ காகிதாதிகள் விற்பனையாளரும் போஸ்கோ ஆட்ரோன் பிறின்டர்ஸ் உரிமையாளருமாகிய ம.சி.சந்திரபோஸ் அவர்களின் தாயார்)**

நல்லூரைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் நாகபூரணம் அவர்கள் 12.05.2003 (நேற்று) காலமாகிவிட்டார். அன்னார் திரு, திருமதி முருகேசு தம்பதிகளின் அன்பு மகளும், மயில்வாகத்தின் அன்பு மனைவியும், பீதாம்பரம், பாலசுப்பிரமணியம், புவனேஸ்வரி, காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் உதயகுமாரி, சந்திரபோஸ், மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத்தாயாரும், ராணி (கனடா), ஜெசிந்தா, சிதம்பரபிள்ளை, அழகர்சாமி, கணேஸ் (தமிழ்ப்பூங்கா, நெல்லியடி), கலைவாணி ஆகியோரின் மாமியும், எம்:எஸ்.பார்த்தீபன் (யாழ்.பரியோவான் கல்லூரி), எம்.எஸ்.அருச்சுனா (யாழ். பரியோவான் கல்லூரி), எம்.எஸ்.கெளதமன் (யாழ்.பரியோவான் கல்லூரி), எம்.எஸ்.தமிழினி (யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பா.மதன், விஜிதா (குகன் ஸ்ரோர்ஸ்), பா.அருண் (யாழ். பல்கலைக்கழகம்), பா.நிரஞ்சன் (Ceylon cold store ltd), சி.மதிவதனன் (இந்தியா), சி.விஜயசந்திரன், மதிவதனி (சுவிஸ்), சி.மாதினி (யாழ். பல்கலைக்கழகம்), சி.மணிவண்ணன், சி.துளசி, அ.விசாகன், அ.கௌசிகன் (யாழ்.பரியோவான் கல்லூரி), பீ.ஆனந்தக்குமார் (சுவிஸ்), பீ.சிசிலியா (கனடா), பீ.நீரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இல. 252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் நாளை (14.05.2003) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*252, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல் -
ம.சி.சந்திரபோஸ்
(மகன்)

(சி-928)

## கண்ணீர்க் காணிக்கை

**Acadamy of Oriental Martial Arts (Shotokan)**
**A.O.M.A. கராட்டிக் கழக சிரேஷ்ட உறுப்பினர்**
**ம.சி.சந்திரபோஸ் (போஸ்கோ) அவர்களின் அன்புத் தாயார்**

### திருமதி மயில்வாகனம் நாகபூரணம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

A.O.M.A. கழக
ஆசிரியர்களும்,
மாணவர்களும்.

(சி-929)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.